RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22262

OPEN ACCESS

# நாட்டுப்புறவியல் பாடல்களில் மானுட செல்நெறிகள்

பெ. வைரமூர்த்தி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, டாக்டர் கலைஞர் அரசு கலைக்கல்லூரி, குளித்தலை-639120, தமிழ்நாடு, இந்தியா

# Human Characteristics in Folklore Songs

P. Vairamoorthy [a, *]

[a] Department of Tamil, Dr.Kalaignar Government Arts College, Kulithalai-639120, Tamil Nadu, India

* Corresponding Author: drvairamoorthyptamil@gmail.com

Received: 26-09-2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Literature begins with the introduction of folk songs. Just as the origin of folk literature cannot be said with certainty, just as it is impossible to say when man was originated. Oral literature began to develop when man began to think. Literature originated first orally and then as written language. It is in the nature of exploring the customs, traditions and beliefs of primitive man. Folk literature is a mirror that reveals the culture, customs and thoughts of the people. People's sentiments, poetry, power, and imagination can be seen realistically in folk songs, which are in a verbal form and people catches it immediately. Folk songs have been around for thousands of years since the day man began to speak. In these folk songs, the hypothesis is based on the soil in which man lived, his work and what he heard and felt about life.

**Keywords:** Folk songs, Sentiments, Folk literature, Customs

## முன்னுரை

இலக்கியத்தின் தொடக்கம் நாட்டார் பாடல்களாகும். மனிதனின் தோற்றம் எப்போது என்று சுட்ட முடியாதது போன்று மக்களின் இலக்கியம் எனப் போற்றப்படும் நாட்டார் இலக்கியத்தின் தோற்றமும் அறுதியிட்டு கூறமுடியாது. மனிதன் சிந்திக்கத் தொடங்கிய போதே வாய்மொழி இலக்கியம் உருவாகத் தொடங்கி விட்டது. இலக்கியம் முதலில் வாய்மொழி அடுத்து எழுத்துமொழி என தோற்றம் பெற்றதாகும். இது ஆதி மனிதனின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள் ஆகியனவற்றை ஆராயும் இயல்பு கொண்டு அமைகிறது. நாட்டார் இலக்கியங்கள் மக்களுடைய பண்பாடு பழக்க வழக்கங்கள், எண்ணங்கள் ஆகியனவற்றை வெளிக்காட்டும் கண்ணாடியாகும். நாட்டார் பாடல்களில் எதார்த்தமாக மக்களது உணர்வினையும், கவிதை புனையும் ஆற்றலையும், கற்பனை வளத்தையும் காண முடியும் இவை வாய்பாட்டு வடிவம் கொண்டதால் நேரடியாக நெஞ்சில் பதியக்கூடிய இயல்புடையதாக அமைகிறது. நாட்டார் பாடல்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மனிதன் பேசத் தொடங்கிய நாளன்றே முகிழ்ந்தது. இப்பாடல்களில் கருதுகோள் மனிதன் வாழ்ந்த மண் சார்ந்தும், அவனின் பணி சார்ந்தும் மேலும் அவன் கேட்டது, உணர்ந்து என வாழ்வின் பதிவுகளைச் சொல்கிறது.

## பண்பாட்டுக்கூறுகள்

நாட்டார் பாடல்கள் யாவும் உழைப்பின் காரணமாய் செயல்படும் மானுடத்தின் உணர்வு வெளிப்பாடாகும், பிறப்பு தொடங்கி வாழ்வின் பல்வேறு படிநிலைகளைக் கடந்து இறப்பு வரை சொல்லக் கூடியதாய் அமைகிறது. மானுட வாழ்வின் நிறை, குறைகளைத் தெளிவாகக் காட்டி

அதற்கான தீர்வினையும் நையாண்டியாய் வெளிப்படுத்தக் கூடியது நாட்டார் பாடல்கள் ஆகும். இது மானுடத்தின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், பழமையான எண்ணங்கள் இதனை உணர்வுகளுடன் கவிதையாக மனதில் தைக்கும் வண்ணம் வெளிப்படுகிறது.

"நாட்டுப்புற வழக்காறுகள் தலைமுறை, தலைமுறையாக வாழையடி, வாழையாக நிலவி வருகின்றன நாட்டுப்புறப் பாடல், கதைகள், பழமொழி, விடுகதை போன்றவைகள் பல்லாண்டு காலமாக வாய்மொழியாக பரப்பப்பட்டு வருகின்றன". என நாட்டுப்புறப் பாடல்கள் வெறுமனே உணர்வு நிலையினைக் கடந்து வாழ்வின் பல பண்பாட்டுக் கூறுகள் அமைந்து இருப்பதை உணரமுடிகிறது (Sakthivel, 2006). வெறுமனே வாய்மொழியாக பரப்பப்பட்டு வரும் நாட்டுப்புற பாடல்கள் மானுடத்தின் அனைத்துக் கூறுகளான நம்பிக்கை ஈகை, கொடை, இறைவழிபாடு, சடங்குகள், அவலம், வீரம், கலை, அவலங்கண்டு எதிர்த்தல், ஒழுக்கம், என வாழ்வின் மானுட பண்புகளை வெளிப்படுத்துகிறது. இதனால் இலக்கியம் என்ற கற்பனை நிலையைக் கடந்து நிலைத்து நிற்கிறது.

## நம்பிக்கை

நாட்டுப்புறவியல் என்பது மக்களின் நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்களின் வெளிப்பாடாகும். நம்பிக்கை என்பது தனி மனிதனால் சமூகத்தின் நன்மைக்காக உருவாக்கப்பட்டு, சமூகத்தால் பாதுகாக்கப்படுகிறது. நம்பிக்கைகள் காலம் காலமாக தொடர்ந்து வரக் கூடியதாக அமைகிறது. நம்பிக்கைகள் பெரும்பாலும் வாழ்வின் அச்சம் காரணமாய் தோன்றியதாக அமைந்தாலும் ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு பயனித்துக் கொண்டே இருக்கிறது. நம்பிக்கைகள் மனித வாழ்வின் சில நிகழ்வுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத போது மனித மனம் தானே சில காரணங்களை உருவாக்கி கற்பித்துக் கொள்கிறது.

"ஆற்றய லிருந்த இருந்தோட் டஞ்சிறை

நெடுங்காற் கணந்துள் ஆளறி வறீஇ

ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்"

என்ற சங்க இலக்கிய குறுந்தொகைப் பாடல் நற்சொல் கேட்டல் என்ற நம்பிக்கையை வெளிப்படுகிறது (Puliyur Kesigan, 1996). நாடுப்புறப் பாடல்கள் மானுட வாழ்வின் பிறப்பு, பெயர் வைத்தல், உடலில் தழும்பு ஏற்படுத்தல், திருமணச் சடங்குகள், கங்கணம் கட்டுதல், இறப்பு முறைச் சடங்குகள் என பல நிலைகளை வெளிப்படுத்துகிறது. மனிதன் கிராமப் புறச்சூழலில் இருந்து இயந்திர நிலைச் சூழல் வரை வளச்சி பெற்று இருந்தாலும் வாழ்வில் நாகரீகம் பெற்று இருப்பினும் அதன் சூழலுக்கு ஏற்ப நம்பிக்கைகள் மறு அவதாரம் கண்டு அமைந்து கொண்டே இருக்கிறது,

## கருணை

உலகில் உயிர்கள் ஒன்றின் மீது ஒன்று அன்பு வைத்தல் அவசியமாகும். பிற உயிர்களின் துன்பத்திற்கு இரங்குதல் வேண்டும். உலக வாழ்வு என்பது ஒன்றுடன் ஒன்று சேர்ந்த பினைப்பு நிலையாகும். தொடக்க நிலையில் மனிதன் தனித்து இருந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்திருந்தான் பின்னர் தனது தனிமை நிலையை உணர்ந்து தேவை மற்றும் பாதுகாப்பிற்கு மனிதன் பிற உயிர்களுடன் இணைந்த வாழ்வே முழுமையானது என்பதனை உணர்ந்து வாழத் தொடங்கினான் இந்த உலகில் ஒவ்வொரு நடத்தைக்கும் ஒற்றுமையே காரணமாகும் ஒற்றுமைக்கு அடித்தளம் சக உயிர்கள் மீது இரக்கமும் கருணையும் அன்பு வைத்தல் வேண்டும்.

"என்னை நினைப்பாரைக் கொல்லாதே என்பேர் உரைப்பாரைக் கொல்லாதே

ஊட்டுணவு தருவாரைக் கொல்லாதே ஒண்தொடி மார்களைக் கொல்லாதே

கூலிக்குத்தி பிழைப்பாரைக் கொல்லாதே" (Sanmuga Sundaram, 1980)

என நாட்டார் பாடலில் தீங்கு இழைக்கக் கூடாது என உரைப்பது பாடலாகிறது. ஊட்டுணவு தருவோர், ஒண்தொடி மார்கள், கூலிக்குத்தி பிழைப்போர் இவர்கள் மீது கருணை வைத்து இவர்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படுத்தல் கூடாது என்கிறது நாட்டுப்பாடல்கள் இதன் மூலம் தன் வாழ்விற்கு பிறர் உதவியாய் இருப்பவர்கள் மீது கருணை காட்டுதல் வாழ்வின் நிதர்சனம் என காட்டப்படுகிறது.

## இறைவழிபாடு

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அதனை எதிர்கொள்ள இயலாத மனிதன் இயற்கையை இறைவனாக்கி வழிபடுகிறான். இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடுகிறான். நல்லவை நடந்தால் அது தெய்வத்தின் அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்று நம்பினான். இறைவனை வழிபடத் தொடங்கி நடந்த நிகழ்விற்கு, நன்றிக் கடன் செய்யும் வகையில் விழா எடுக்கத் தொடங்கினான். இதனையடுத்து இறந்த முன்னோரை வழிபடும் இயல்பும் காணமுடிகிறது. ஒருவர் இறந்த பின்பும் அவர் செய்த அறச் செயல்கள் அவரது குடும்பத்தார்க்கு தொடர்ந்து வருவதாய் நம்பிக்கை இதன் காரணமாய் வழிபாடு செய்யப்படுகிறது. இதனையடுத்து குலதெய்வ வழிபாடும் செய்யப்படுகிறது.

"குருவை மறந்தாலும் குல தெய்வத்தை மறவேன்

குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி"

என குலதெய்வ வழிபாடு சுட்டப்படுகிறது. குலதெய்வம் ஊர் தெய்வமாகவும் வழிபாடு செய்யப்படுகிறது. இறைவழிபாடு மானுட வாழ்வில் பின்னிப்பினைந்து காணப்படுகிறது, நாட்டுப்புற இறைவழிபாடு நாட்டுப்புறக் கலைகளின் வளர்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுத்தது என்றால் மிகையாகாது. இவை மட்டுமன்றி இறைவனுக்குக் காணிக்கைகளாக படையல் வைத்தும் பலி இட்டும் தன்னை காத்துக் கொள்ள முயல்வதாக நம்புகிறான். வழிபாடு மற்றும் திருவிழாக்கள் வாயிலாக உள்ளத்திற்கு மகிழ்வும் மானுட உறவிற்குத் தொடர்பும் ஏற்படுகிறது என்பது உண்மையாகும்.

## அவலம்

வாழ்க்கை என்பது இன்பம், துன்பம் என இரண்டும் கொண்டதாகும் மனிதன் இன்பமான வேலையில் ஆனந்தமாய் கொண்டாடி மகிழ்கின்றான் துன்பம் ஏற்பட்ட நிலையில் அழுது தனது துயரத்தை வெளிப்படுத்தித் துயரம் அடைகின்றான் இன்பம், துன்பம் இரண்டு நிலையையும் பாடல் வாயிலாக வெளிப்படுத்தி மனதில் அழுத்தத்தை வைத்துக் கொள்ளாமல் இரக்கி வைத்து விடுகிறான்.

"கொல்லன் ஓலை நெருப்பு

குளிரும் ஒரு காலம்

என் கொடிய மடி நெருப்பு

தான் குளிருவது எக்காலம்"

என்று அவல உணர்வை வெளிப்படுத்தும் இயல்பு கேட்பவரை வருத்தம் கொள்ளச் செய்யும் வகையில் மிகவும் எதார்த்தமாய் அமைக்கப்பட்டுள்ளது. மனித வாழ்வில் துன்பம் ஏற்பட்ட உடன் அதனை வெளிப்படுத்த கண்ணீர் தானே வருகிறது, பெரும் துயரத்தின் போது அதனை வெளிப்படுத்த நாட்டுப்புறப் பாடல்கள் பெரிதும் துணையாக அமைகிறது. துக்கம் தனிமனித நிலையைக் கடந்து சமூக அளவிலான பொதுத் துக்கமாய் அமையும்போது அதனை வெளிப்படுத்திட மனிதன் பாடல்களையே பாடி வந்தான்.

## ஒழுக்கம்

மானுட வாழ்வில் மிகப் பெரிய செயல் ஒழுக்கநெறி பின்பற்றி வாழ்தல் ஆகும். தனி மனித ஒழுக்கம் சமூக நடத்தைக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். சமூகம் செம்மையாக செயல்பட வேண்டும் என்றால் அதற்கு அடிப்படை சமூகத்தில் வாழும் மானுட ஒழுக்கமேயாகும். இலக்கியங்கள் பலவும் மானுட வாழ்வியல் நெறிகளைக் சுட்டுவதற்கே உருவாக்கப்பட்டு உள்ளது. வாழ்வியல் நெறிகளே ஒவ்வொரு இலக்கியத்தின் மையப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது நாட்டுப்புற இலக்கியம் பொழுதுபோக்கிற்கான கூறுகள் மிகுந்து காணப்படினும் அதன் அடிக் கருத்துகள் யாவும் வாழ்வியல் நெறிகளைச் சுட்டும்" சமூதாயத்திற்கு தேவையான நன்னடத்தைகளையும், நன்னெறிகளையும் எளிய வார்த்தைகளில் மனதில் தைக்குமாறு எடுத்துரைப்பதில் நாட்டார் பாடல்களின் பங்கு அளப்பரியதாக உள்ளது.

"போகாதேடா தம்பி போகாதேடா

போக்கிரி வேலைக்குப் போகாதேடா"

வேலம் பட்டையை வெட்டாதேடா தம்பி

பாட்லு பாட்லா சாராயம் குடிக்காதேடா தம்பி"

என்று ஒழுக்கம் பற்றி நாட்டார் பாடல்களில் குறிக்கப்படுவதனை காணலாம் தனி மனிதன் சமூகத்தில் வகுக்கப்பட்ட ஒழுக்க விதிமுறைகளைத் தாண்டிச் செயல்படக் கூடாது. மது அருந்தக் கூடாது, மதுக் காய்ச்சும் வேலையிலும் ஈடுபடக் கூடாது பொது அமைதிக்கு இடையூராய் இருக்கக் கூடாது என்பது உள்பட தனி மனித ஒழுக்கத்தை வலியுறுத்துவதுடன் சமூக நன்மைக்கு தனி மனித ஒழுக்கத்தின் அவசியத்தையும் உரைப்பதைக் காணமுடிகிறது.

## கலைகள்

நாட்டுப்புறப் பாடல்கள் கலைகள் பலவற்றின் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைகின்றன. கலைகள் ஒவ்வொன்றும் மானுடத்தின் ஒவ்வோரு நிலைகளின் பதிவு ஆவணமாய் அமைகின்றன. பொழுபோக்கு, தொழில் என இரண்டு நிலைகளில் அமையக் கூடிய கலைகள் மனிதனின் தேவைக்கு ஏற்ப பல வடிவங்களைப் பெற்று வளர்ந்து கொண்டே செல்கின்றன. நாட்டுப் புறப் பாடல்களில் மருத்துவம், கட்டிடக் கலை, விளையாட்டு என வளர்ந்து கொண்டே செல்லக்கூடிய நாட்டுப்புறப் கலைகள் மானுடத்தின் இன்றியமையா தேவையாக இருக்கின்ற ஒன்றாகும் தேவையற்ற வெறுமனே அழகுக்கான விசயம் என்பதே எதுவும் இல்லை எதார்த்த வாழ்வின் தேவையைச் சித்தரிக்கும் கலைகளே நாட்டுப்புறப் பாடல்களில் மிகுந்து காணக் கிடக்கிறது.

"கடைக்குக் கடை பார்த்து

கல்லிழைத்த சங்கெடுத்து

சுத்திச் சிகப்பிழைத்து

தூருக்கே பச்சை வைத்து

வாய்க்கு வயிரம் வைத்து"

என் பாலூட்டும் சங்கின் வடிவமைப்பை அழகுபட வருணித்துக் கூறப்படுகிறது. ஒரு சங்கினை கலை நயத்துடன் கற்களால் இழைத்தும், பல வர்ணங்கள் சிகப்பு, பச்சை என வர்ணம் பூசப்படுகிறது இதோடு விட்டு வைக்காது சங்கின் வாய்ப்பகுதிக்கு வைரக் கற்கள் வைக்கப்படுவதாய் சுட்டப்படுகிறது. இதன் மூலம் நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படும் கற்பனை வளமும் நுண்கலை நுட்பமும் நன்கு புலனாகிறது.

## முடிவுரை

நாட்டுப்புறப் பாடல்கள் மானுடத்தின் எதார்த்த நிலைகளைச் சுட்டக்கூடிய இயல்பு கொண்டு அமைகிறது. நாட்டுப்புறப் பாடல்களில் மானுடப் பண்புகளை வெளிக்காட்டுவதில் மிகத் திறம்பட படைப்பாளர்களின் படைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இயற்கையை இறைவனாய்ப் பார்க்கும் இயல்பு இருந்ததுடன் இயற்கைக்கு உரிய அங்கீகாரம் வழங்குதலும் மானுடப் பண்பாய் அமைந்ததை அறியலாம். சமூகத்தை நல் வழிப்படுத்துதல் பணியை நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் படைப்பாளர்கள் உணர்த்துவதுடன் தனி மனித ஒழுக்கம் அதன் அவசியத்தை உணர்த்துகிறார்கள். கலைகள் என்பது வெறுமனே ரசிப்புத் தன்மை மட்டும் கொண்டதாய் அமைவதை விடுத்து மனிதனுக்கு தேவையாக அமையும் ஒவ்வொரு பொருளிலும் கலை நயத்தை வைக்கும் இயல்பை நாட்டுப் புறப் பாடல்களின் வழி அறியலாம்.

## References

Puliyur Kesigan, (1996) Kurunthokai, Gowra Publications, Chennai, India

Sakthivel, S. (2006) Nattupura Iyal Aivu, Manivasagar Pathipagam, Chennai, India

Sanmuga Sundaram, K. (1980) Nattupura Ilakkiya Varalaru, Manivasagar Pathipagam, Chidambram, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License